## 2.6 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் உள்ள கூடுதல் இயக்குநர் பணியிடங்களை பரிமாற்றம் செய்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ 1) துறை

அரசாணை (நிலை) எண்.17 நாள் : 21.2.2007

படிக்க :

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.77523/06/இ–1, நாள் 7.10.06.

**ஆணை**

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிகத்தில் ஊ.வ.துறையின் கீழ் உள்ள மொத்த கூடுதல் இயக்குநர் பணியிடம் 8 என்றும் இதில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் இயக்குநராக கூடுதல் நிலையில் ஒரு பணியிடமும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில் முதன்மை தேர்தல் அலுவலர் (Principal Election Officer) ஆக கூடுதல் இயக்குநர் நிலையில் ஒரு பணியிடமும் போக மீதமுள்ள கீழ்காணும் 6 பணியிடங்கள் ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

| வரிசை எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடத்தின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (கரிமவாயு) | 1 |
| 2. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (கண்காணிப்பு) | 1 |
| 3. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (திட்டங்கள்) | 1 |
| 4. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (டிரைசம்) | 1 |
| 5. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (சுகாதாரம்) | 1 |
| 6. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (பணியமைப்பு) | 1 |

மேலும் இணை இயக்குநர் நிலையில் 85 பணியிடங்கள் உள்ளன என்றும் இதில் திட்ட அலுவலர், சுனாமி திட்ட செயலாக்க பிரிவு சென்னை, சமூகவியலர், தமிழ்நாடு நீர் நிலை மேம்பாட்டு வாரியம் மற்றும் இணை இயக்குநர் (மதிய உணவு) திட்டம் சமூக நலத்துறை ஆகிய மூன்று இணை இயக்குநர் பணியிடம் தவிர கீழ்காணும் 82 இணை இயக்குநர் பணியிடங்கள் இத்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

| வரிசை எண். | அலுவலகத்தின் பெயர் | பணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சி இயக்ககம், சென்னை. | 2 |
| 2. | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | 29 |
| 3. | திட்ட அலுவலர், மகளிர் திட்டம் (மாவட்டங்களில்) | 29 |
| 4. | திட்ட அலுவலர், மகளிர் திட்டம், சென்னை அலுவலகம் | 1 |
| 5. | திட்ட ஒருங்கிணைப்பாளர், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, மகளிர் திட்டம், சென்னை அலுவலகம் | 1 |
| 6. | இணை இயக்குநர், விரைவுரையாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலைநகர் | 1 |
| 7. | முதல்வர், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனம் | 5 |
| 8. | திட்ட அலுவலர், சுனாமி திட்ட செயலாக்க பிரிவு (மாவட்டங்களில்) | 12 |
| 9. | திட்ட அலுவலர், சுனாமி திட்ட செயலாக்க பிரிவு (தலைமை அலுவலகம்) | 2 |

2. மேலும் தற்போது கூடுதல் இயக்குநராக பணியில் உள்ள அனைவரும் உதவி இயக்குநர்களாக நேரடியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் என்றும், இளம் வயதினர்களாக உள்ள இவர்கள் ஓய்வு பெறும் வரை நீண்ட காலம் கூடுதல் இயக்குநர்களாகவே ஊரக வளர்ச்சி இயக்ககத்திலேயே இருக்க நேரிடும் என்றும் இதனால் இப்பதவிக்கு மற்றவர்கள் வருவதற்கு தடையாக அமைவதுடன், இந்த கூடுதல் இயக்குநர்கள் களப்பணி நடவடிக்கையிலிருந்து விலகி இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். கூடுதல் இயக்குநர்களை களப்பணிக்கு அனுப்பவும் அதேபோல் திறமையான இணை இயக்குநர்களை இயக்குநரகத்தில் நியமனம் செய்யவும் வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். இதனால் கூடுதல் பணியிடமோ கூடுதல் நிதிச்சுமையோ ஏற்படாது என்றும் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில் கூடுதல் இயக்குநர் நிலை அலுவலர்களை இணை இயக்குநர் பணியிடங்களில் நியமனம் செய்யத்தக்கவகையில், அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்கு மிகாமல், நிலை உயர்த்தவும் அதே போல் அதற்கு சமமான எண்ணிக்கையில் கூடுதல் இயக்குநர்கள் பணியிடங்களை, இணை இயக்குநர்களை அப்பணியிடங்களில் நியமனம் செய்யும் வகையில் நிலை தாழ்த்தவும், நெகிழ்வு மற்றும் பரிமாற்ற தன்மை கொண்ட பணியிடங்களாக (Flexible as interchangeable posts) அறிவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் உள்ள 6 கூடுதல் இயக்குநர் பணியிடங்களில் கூடுதல் இயக்குநர் (பணியமைப்பு) மற்றும் அரசு முடிவு செய்யும் வேறு ஒரு கூடுதல் இயக்குநர் பணியிடம் நீங்கலாக மற்ற 4 கூடுதல் இயக்குநர் பணியிடங்களையும் இணை இயக்குநர் பணியிடங்களையும், அதில் பணிபுரியும் அலுவலர்களை பணி மாற்றம் செய்யத்தக்க வகையில் அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிட எண்ணிக்கைக்கு மிகாமல் நிலை தாழ்த்தியும் உயர்த்தியும், பரிமாற்றம் செய்யத்தக்க வகையில் நெகிழ்வு மற்றும் பரிமாற்ற தன்மை கொண்ட பணியிடங்களாக (Flexible as interchangeable posts) அறிவித்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையில் அ.சா.கு.எண்.9492/ஊ.வ./ 2007 நாள் 15.2.07ல் இசைவினை பெற்று வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்